தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-9-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடைக்கு பின் சோளத்தை உடனடியாக விற்கலாம்

இந்தியாவின் சோள உற்பத்தியில் தமிழ்நாடு ஆறாமிடம் வகிக்கிறது. சோளம், தீவனம், தீவனப்பயிர் மற்றும் தானியமாகப் பயன்படுத்தப்படுகிறது. மகாராஷ்டிரா, கர்நாடகா, இராஜஸ்தான், மத்தியபிரதேசம், ஆந்திரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை சோளம் பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும்.

தமிழ்நாட்டில் நாமக்கல், திண்டுக்கல், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், விருதுநகர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்கள் மொத்த சோள சாகுபடிபரப்பில் 76 சதவீதம் பங்களிக்கின்றன. தற்போது நெகமம், பல்லடம், அவிநாசி, ஈரோடு, திருச்சி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகிய பகுதிகளிலிருந்து சந்தைக்கு வரத்து துவங்கியுள்ளது. மைசூரிலிருந்து வரத்து அக்டோபர் முதல் வாரத்திலிருந்து துவங்க உள்ளது. சோளத்தின் முக்கிய இரகங்களான மஞ்சள் சோளம் நல்ல தரமான தீவன உற்பத்தியிலும் மற்றும் வெள்ளை சோளம் அல்லது கரிச்சோளம் விதைப்பு மற்றும் உணவிற்காகவும் பயன்படுகிறது. தமிழ்நாட்டில் சோளம், ஆடிப்பட்டம் (ஜூலை–செப்டம்பர்), புரட்டாசி பட்டம் (அக்டோபர் - டிசம்பர்) மற்றும் கோடை காலங்களில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் கோ-5 கலப்பின இரகம், அதிக மகசூல், தீவனம் மற்றும் உணவிற்கேற்ற இரகமாகும். மேலும் இது குருத்து ஈ மற்றும் கதிர் பூசண நோய்க்கு எதிர்ப்புத்திறன் உடையது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 12 ஆண்டுகளாக திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு

மையத்தில் இயங்கிவரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

சராசரி தரமான தானியசோள இரகத்தின் தற்போதைய பண்ணை விலை ரூ.21 முதல் ரூ.23வரை திருப்பூர் சந்தையில் விற்கப்படுகிறது. பொருளியல் அளவை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் ஆடிப்பட்ட தானிய சோளத்தின் பண்ணைவிலை அக்டோபர் - நவம்பர், 2015 மாதத்தில் கிலோவிற்கு ரூ.22-23 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த சோளத்தை உடனே விற்க பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறுதானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2450507

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்